TYPEWRITERS
Sales & Service
FUDO, 39/17, Power House Rd
3rd Lane, Jaffna

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

ரைப்ரைட்டர்
வாங்கவும் – விற்கவும்
திருத்தவும்
தமிழ் – ஆங்கிலம்
ரைப்பிங் வேலைகளுக்கும்
FUDO
OFFICE MACHINE CO.
39/17, மின்சார நிலைய வீதி,
3-ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

மலர் 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 25 ஞாயிற்றுக்கிழமை 09 08 1992 UTHAYAN – A Lively National Tamil Daily கதிர் 255

குடாநாட்டைத் தாக்கும் திட்டம் குறித்து மாநாடு நடத்திவிட்டுத் திரும்பிய வேளை...

கொப்பேகடுவ, விமலரத்ன, ஜயமா உட்பட உயர் அதிகாரிகள் 9 பேர் கூண்டோடு பலி!

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள தீவகத்தில் வாகனம் மீது புலிகள் கண்ணி வெடித் தாக்கு!

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 9

ஸ்ரீலங்கா இராணுவம், கடற்படை ஆகியவற்றைச் சேர்ந்த மிக உயர்நிலை அதிகாரிகள் மூவரும், மற்றும் உயர்நிலை அதிகாரிகள் ஆறு பேரும் நேற்று தீவுப்பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் கூண்டோடு பலியானார்கள்!

அவர்களில் வடபகுதி இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான தள்பதி மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவவும் —

யாழ். மாவட்டத் தளபதி பிரிகேடியர் விஜய விமலரத்னாவும் —

வடக்கு - கிழக்கு கடற்படை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான கொமடோர் மொஹான் ஜயமஹாவும் — அடங்குவர்.

கடந்த ஒரு வருட காலமாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தீவுப்பகுதியைச் சேர்ந்த வேலணைக்குச் சமீபமாக உள்ள அராலியில் நேற்றுக் காலை ஒன்பது மணியளவில் இக்கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் மொத்தம் 10 படையினர் உயிரிழந்தனர்.

புலிகளின் தாக்குதல் இது; ராணுவம் ஒப்புக்கொண்டது

கொழும்பு, ஆகஸ்ட் 9

படை அதிகாரிகளை கூண்டோடு பலிவாங்கிய கண்ணிவெடியை விடுதலைப் புலிகளே வைத்தனர் என்று ஸ்ரீலங்கா இராணுவத் தரப்பில் ஒப்புக் கொள்ளப்பட்டதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன. [உ-எ]

புலிகள் எப்படி நுழைந்தனர்? விசாரணை நடத்தப்படும்!

கொழும்பு, ஆக. 9

படையினரின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகக் கூறப்படும் பிரதேசத்துக்குள் விடுதலைப் புலிகள் எப்படி நுழைந்தனர்? எப்படி கண்ணிவெடியைப் புதைத்தனர்? கண்ணிவெடி அங்கு எப்படி வந்தது?

— இத்தகைய கேள்விகள் இராணுவ உயர் வட்டாரங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றனவாம்.

இந்த விடயங்கள் குறித்து விசாரணை நடத்த இராணுவம் முடிவு செய்திருப்பதாக ஏஜென்ஸிச் செய்தி ஒன்று தெரிவித்தது

எச்சரிக்கப்பட்டிருந்தும் ஒன்றாகச் சென்றது ஏன்?

கொழும்பு, ஆக. 9

எந்தச் சந்தர்ப்பத்திலும் இராணுவத் தலைமை அதிகாரிகள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து செல்லக் கூடாது என்று எச்சரிக்கப்பட்டிருந்தும் கூட டென்ஸில் கொப்பேகடுவ ஏனைய படைத்தளபதிகள் மற்றும் உயரதிகாரிகளையும் ஒரே வாகனத்தில் அழைத்துச் சென்றது ஏன்?

[4 ஆம் பக்கம் பார்க்க]

கண்ணிக்குப் பலியான படைத் தளபதிகள் 9 பேர்

கொழும்பு, ஆக. 9

வேலணை அராலிப் பகுதியில் நேற்று கண்ணி வெடிக்குப் பலியாகிய ஸ்ரீலங்கா தளபதிகள் மற்றும் படையினரின் விவரம் வருமாறு :-

- ★ மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ (வடபிராந்திய இராணுவத் தளபதி)
- ★ பிரிகேடியர் விஜய விமலரத்ன (யாழ். மாவட்ட இராணுவத் தளபதி)
- ★ கொமடோர் மொஹான் ஜயமஹா (வடபகுதி கடற்படைத் தளபதி)
- ★ மேஜர் என். எச். டி. அல்விஸ்
- ★ லெப்டினன்ட் கேர்ணல் ஜி. எச். ஆரியரத்ன
- ★ லெப்டினன்ட் கேர்ணல் ஏ. பலிப்பஹான
- ★ லெப்டினன்ட் கேர்ணல் எச். ஆர். ஸ்டீபன்
- ★ கடற்படை லெப்டினன்ட் ஏ. லங்காதிலக
- ★ கடற்படை லெப்டினன்ட் டபிள்யூ. டி. சி. டபிள்யூ. விஜயபுர

பிரேமா கண்ணீர் விட்டார்

கொழும்பு, ஆக. 9

நேற்று வேலணை - அராலியில் விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் உயிரிழந்த வடபகுதித் தளபதி மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவவின் பூதவுடலுக்கு ஜனாதிபதி பிரேமதாசா, பிரதமர் விஜேதுங்க ஆகியோர் தமது இறுதி அஞ்சலிகளைச் செலுத்தினர்.

றொஸ்மீட் பிளேஸில் உள்ள அவரது வீட்டுக்குச் சென்று நேற்று இருவரும் அஞ்சலி செலுத்தினர். அப்போது ஜனாதிபதி துக்கம் தாளாது கண்ணீர் விட்டு அழுதார். அவர் தமது கண்ணீரைக் கைக்குட்டையால் துடைத்ததை ரூபவாஹினியில் பார்க்க முடிந்தது. (அ-ஒ)

மக்களை அமைதி காக்குமாறு கேட்கிறது இராணுவம்!

கொழும்பு, ஆக. 9

இராணுவத்தின் உயர் தளபதிகள் உயிரிழந்திருக்கும் இவ்வேளையில் — பாரிய இழப்புக்கு மத்தியிலும் — மக்கள் அமைதிகாக்க வேண்டும்.

— இப்படி ஸ்ரீலங்கா இராணுவம் நேற்று கொழும்பில் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறது.

நாட்டுக்கு தேசிய மட்டத்தில் துயரம் ஏற்பட்டுள்ள இச்சமயத்தில் ஆயுதப் படையினர் தமது நோக்கங்களை அடைவதற்கான முயற்சிகளை இரட்டிப்பாக்கி வருகின்றனர் —என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதல் நடத்துவது எப்படி?

நேரில் சென்று பார்த்துவிட்டு திரும்பியபோது விபரீதம்

கொழும்பு, ஆகஸ்ட் 9

வடக்கில் அடுத்த கட்டத் தாக்குதலை எப்படி நடத்துவது என்பது குறித்து முக்கிய கூட்டம் ஒன்றை வேலணையில் நேற்றுக்காலை நடத்திவிட்டு திரும்பியபோதே படைத்தளபதிகள் கண்ணிவெடித் தாக்குதலுக்கு இலக்கானார்கள்.

டென்ஸில் கொப்பேகடுவவும், விஜய விமலரத்னவும் நேற்று முன்தினம் இரவு காரைநகர் கடற்படை முகாமில் தங்கியிருந்தனர்.

நேற்றுக் காலை 9 மணியளவில் வேலணை அராலிப் பகுதிக்கு வந்த அவர்கள் அங்கு இராணுவ நடவடிக்கை

[4 ஆம் பக்கம் பார்க்க]

கொப்பேகடுவவுக்கு அஞ்சலி

கொழும்பு, ஆக. 9

மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவவின் சடலம் நேற்று கொழும்பில் றொஸ்மீட் பிளேஸில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்தது.

மக்கள் 'கியூ'வில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

பாதுகாப்பு அமைச்சும் கொப்பேகடுவ உட்பட உயிரிழந்த பத்து படையினருக்கும் அஞ்சலி தெரிவித்துள்ளது.

கண்ணிவெடித் தாக்குதலில் படுகாயமடைந்த டென்ஸில் கொப்பேகடுவ அவசர அவசரமாக ஹெலிக்கொப்டர் மூலம் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டார்.

ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சைக்கு உட்படுத்திய சமயம்

[4 ஆம் பக்கம் பார்க்க]

இராணுவ நடவடிக்கைகளுக்கு திடீரென பெரும் பின்னடைவு

கொழும்பு, ஆக. 9

படைத்தளபதிகள் கூண்டோடு உயிரிழந்த சம்பவம் வடக்கு — கிழக்கில் ஸ்ரீலங்காப் படைகளின் நடவடிக்கைகளுக்கு திடீரென பெரும் பின்னடைவை ஏற்படுத்தியிருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

வடக்கில் கூட்டாக இராணுவ நடவடிக்கைகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்த வேண்டிய வடபிராந்திய இராணுவத் தளபதி, யாழ். மாவட்ட இராணுவத் தளபதி, வடபகுதிக்குப் பொறுப்பான கடற்படைத் தளபதி ஆகிய மூவருமே ஒன்றாக உயிரிழந்திருப்பதால், வடக்கில் ஸ்ரீலங்கா இராணுவ நடவடிக்கைகள் பெருமளவில் பாதிப்படையும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கிழக்கில் அடுத்தடுத்து அதிரடித் தாக்குதல்களுக்கு இலக்காகி நிலைகுலைந்து வரும் ஸ்ரீலங்காப் படைகள்—

வடக்கில் பெரும் இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு, தமது நிலையை சமாளிக்கத் திட்டமிட்டிருந்த வேளையில் இந்த கண்ணி வெடித் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

காரைநகரில் படைகளைக் குவித்து, யாழ்ப்பாணத்தை நோக்கி பெரும் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள படையினர் திட்டமிட்டிருந்த வேளையில்— அப்பகுதியிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

இதனால் ஸ்ரீலங்காப் படைகளின் உத்தேச தாக்குதல் திட்டம் குழம்பி விட்டதாகக் கருதப்படுவதாக அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

இந்தக் கண்ணிவெடித் தாக்குதல் சம்பவத்திற்கு உலக செய்தி [illegible] முக்கியத்துவம் கொடுத்து நேற்றிரவு வரை பல்வேறு செய்திகளை [illegible] இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. [உ-ஒ-எ-5-10]

பத்தாவது நபர் சிப்பாய்

நேற்று தீவுப்பகுதியில் கூண்டோடு பலியான — ஸ்ரீலங்கா படைத்தளபதிகள் — ஒன்பது பேருடன் உயிரிழந்த பத்தாவது நபர் சாதாரண சிப்பாய் என்று தெரிவிக்கப்படுகிறது.

டபிள்யூ. ஜே. விக்கிரமரத்ன என்ற இவர் வாகனச் சாரதியாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. (உ)

குண்டுச் சத்தம் கேட்டது

மூளாய், ஆக. 9

நேற்றுக் காலை 9.00 மணியளவில் தீவகப் பகுதியில் இடம்பெற்ற பெரும் குண்டு வெடிப்புச் சத்தம் மூளாய்ப் பகுதியிலும் கேட்டது.

[illegible] அது எனக் கருதப்பட்டது. (உ)

படைகளுக்குப் பேரதிர்ச்சி!

கொழும்பு, ஆக. 9

ஸ்ரீலங்காப் படைகளின் மிக முக்கிய உயர்நிலைத் தளபதிகள் — ஒன்பது பேர் கூண்டோடு பலியான சம்பவம் ஸ்ரீலங்காப் படைவட்டாரங்களை பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருப்பதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

1980 ஆம் ஆண்டுகளில் இருந்து விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை வழிநடத்தி, பயிற்சி பெற்ற மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ மற்றும் பிரிகேடியர் விஜய விமலரத்ன ஆகியோரின் இழப்பு — தற்போது இராணுவம் சந்தித்திருக்கும் மாபெரும் இழப்பு என வர்ணிக்கப்படுகிறது.

தங்களின் உயர் அதிகாரிகளை இழந்திருப்பது இராணுவத்தினரின் மனத்திடத்தைப் பெரிதும் பாதிக்கும் அம்சம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. (உ-ஒ-எ)

ஸ்ரீலங்காப் படை - புலிகள் போரில் மிகவும் முக்கியமான தாக்குதல்

ஸ்ரீலங்காப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்துவரும் போரில் நேற்று தீவுப் பகுதி வேலணையில் இடம்பெற்ற தாக்குதல் மிகவும் முக்கியமான — சரித்திர முக்கியத்துவம் மிக்க — தாக்குதல் சம்பவமாகும் என்று அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

கடந்த ஆண்டில் திருகோணமலைப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் பிரிகேடியர் லக்கி விஜேரத்ன கொல்லப்பட்டார்; அதன் பின்னர், கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் பூநகரிப் பகுதியில் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி லெப்டினன்ட் கேர்ணல் புஞ்சிஹேவா உயிரிழந்தார்.

இவற்றை எல்லாம் விட நேற்று நடந்த தாக்குதல் மிகப் பெரியது. இராணுவ வட்டாரங்களை அதிர்ச்சியில் இருந்து மீளவிடாத பேரிடியான தாக்குதல் இது என்றே சொல்ல வேண்டும் — என்றும் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர். [ஒ]

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 21 H. P. விஸ்டர் இஞ்ஜின் என்ஜினுடன் இறைண்டிங் மில் செற் விற்பனைக்குண்டு ப. வைத்திலிங்கம், செம்குந்தா வீதி, [கல்வியங்காடு சந்தை முன்] வெள்ளைப் பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி கிழக்கு.
(22069)

எல்லா நல்ல இன வளர்ப்பு புறாக்களும், அடை வைப்பதற்கு ஏற்ற பெட்டம், வெள்ளடியன் கோழி முட்டைகளும், குஞ்சுகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: K. அன்னலிங்கம், கலட்டி வேலன், கோண்டாவில் மேற்கு.
(22083)

நீமியா உரம் நெற்பயிருக்குச் சிறந்த அடிக்கட்டுப் பசளை எனக் கண்டறியப்பட்டுள்ளது. வளர்ச்சியின் போது பூச்சி புழுக்களிலிருந்து பாதுகாப்பு. அதிகரித்த விளைச்சல். ஒரு கிலோ 15 ரூபா 20 கிலோ பைக்கெற் ரூபா 260/-. அன்னா கோப்பி கடைகளிலும் கிடைக்கிறது. மில்க்வைற்.
(சி-3016)

தாவடி மானிப்பாய் வீதியில் பெரியவீடு நாலரைப் பரப்பில் விற்பனைக்குண்டு. வாங்குபவர் நேரில் வரவும். பாலசிங்கம், இல. 01, செம்மணி வீதி, நல்லூர், முத்திரைச் சந்தை. [சாமுவேல் தொழிற்சாலையிலிருந்து இரண்டாவது வீடு] [22043]

வெஸ்பா ஸ்கூட்டர் விற்பனைக்கு உண்டு நேரில் தொடர்பு கொள்க கிரியோன் கூல்பார், நவீன சந்தை, சாவகச்சேரி.
[22053]

குத்தகைக்கு

கொழும்பு செட்டியார் தெருவில் கடை குத்தகைக்கு உண்டு. சகல வசதிகளுடன் நகை வியாபாரம் செய்வதற்கு உகந்த இடம். விவரத்திற்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்: 449408, 434485, 434490. [4937]

சகல வசதிகளுடன் நகை செய்வதற்கு உகந்த பட்டறையுள்ள இடம் கொழும்பு செட்டியார் தெருவில் குத்தகைக்கு உண்டு. கம்பி அரைக்கும் மெஷின், பொலிஷ் மெஷின் உண்டு. மேற்கண்ட இடத்திற்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்: 449400, 434488, 434490. [4936]

கல்வி

G. C. E. [O/L] இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தி அடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 25 வருட அனுபவம் உடைய ஆசிரியரினால் இரண்டு மாதங்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் விசேட சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், இல 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி, [22087]

வியாழ மாற்றம்

11-9-92 இல் நிகழும் வியாழ மாற்றப் பலாபலன்கள் விற்பனையாகின்றன. பன்னிரு இராசிகளுக்கும் விரிவான பலன்கள் உண்டு விலை ரூபா 8/-. திருக்கணிதம், மட்டுவில், சாவகச்சேரி. [22056]

O/L Dec. 92

- ★ பகல்நேர
- ★ பகுதிநேர
- ★ மீட்டல் வகுப்புகள்
- ★ வாரத்தில் நான்கு நாட்களிலும்
- ★ மாதாந்த பயிற்சிப் பரீட்சைகளும் நடைபெறுகின்றன.

BOND INSTITUTES,
யாழ்ப்பாணம்.
(5238)

வாசிப்போர் தேவை

விழிப்புலனற்றோருக்கு முழுக்க முழுக்க சேவை அடிப்படையில் தமிழ்ப் புத்தகங்களை வாசித்து உதவக்கூடியவர்கள் உடன் தேவை. கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும். ஆ. பரமேஸ்வரன், மே/பா, ஏ. எஸ். ஆறுமுகம், சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கு.
[5243]

தேவை

வேப்பம் விதை தேவை. தொடர்பு: மில்க்வைற் யாழ்ப்பாணம்.
[சி-3027]

புலமைப்பரிசில் பரீட்சை

எம்மால் வாரந்தோறும் வெளியிடப்படும் ஆண்டு - 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்களும், அரசாங்கம் நடத்திய இறுதிப் பரீட்சை வினாத்தாள்களும் விடைகளுடன் விற்பனையாகின்றன. Bond Book Stall, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[5237]

வாரிவளவு நல்லியக்கச் சபை ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை எடுக்கும் காரைநகர் மாணவர்களுக்கு [பயிற்சிப் போட்டிப் பரீட்சை 15 - 08 - 92 சனிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். நாவலர் மகா வித்தியாலயத்தில் நடத்தப்படும்.
(5242)

கண்டெடுக்கப்பட்டது

ஒரு பெண்கள் கைக்கடிகாரமும், சிறுதொகைப் பணமும் ஸ்ரான்லி வீதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி கீழ்வரும் முகவரியில் பெற்றுக் கொள்ளவும். பாரதி உணவகம், ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
[22093]

Practice Makes One Perfect

ஆண்டு - 5
(புலமைப் பரிசில் - 92)
அடுத்த பயிற்சிப் பரீட்சை

09 - 08 - 1992

மாதத்தின் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளில் பி. ப. 1-00 மணிக்கு இந்நிறுவனங்களில் நடத்தப்படும்.

இந்நிறுவனங்களில் கல்வி கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம். பரீட்சையில் தோற்ற வசதியில்லாதவர்கள் வினாத்தாள்களுக்கு விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும்.

- ★ Bond — யாழ்ப்பாணம்
- ★ Selin — இருபாலை
- ★ Pearl — நீர்வேலி
- ★ Kugan — ஆவரங்கால்
- ★ Satha Pons — வடமராட்சி
- ★ Brilliant — தென்மராட்சி
- ★ Vinyls — சுன்னாகம்
- ★ National — பண்டத்தரிப்பு
- ★ Paarathy — சித்தங்கேணி
- ★ Bitsmans — மானிப்பாய்
- ★ Keen — திருநெல்வேலி
- ★ Osslo — கச்சேரியடி
- ★ Vinayahar — ஆனைக்கோட்டை
- ★ Lukky — சண்டிலிப்பாய்
- ★ Y.M.C.A. — பருத்தித்துறை

விவரங்களுக்கு!
Examination Unit,
BOND INSTITUTES,
யாழ்ப்பாணம்.
[5236]

விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L 94

சனி } 1 — 2 முடிவுக் கணக்கு
ஞாயிறு } 4 — 5 தொங்கல் கணக்கு

A/L 93

சனி } 2 — 3 முடிவுக் கணக்கு
ஞாயிறு } 3 — 4 மற்றுண்டியல் கணக்கு

S. K. பிரபாகரன் B. B. A.

ஆரம்பம்: 09 - 08 - 1992

குறிப்பு:
- ★ விடுமுறை கால விசேட வகுப்புகள் நடைபெறுகின்றன.
- ★ ஒவ்வொரு பாட அலகு முடிவுறும்போது கடந்தகால வினாக்கள் செய்யப்படும்.
- ★ அனுமதிகள் மட்டுப்படுத்தப்படும்.

(சி - 3122)

31ஆம் நாள் நினைவஞ்சலி

தாய் மடியில்: 08 — 11 — 1970

இறை அடியில்: 10 — 07 — 1992

செல்வி ரஜனி இலங்கராசா

பத்தமுடன் பாசமெலாம் பாசாயோடப்
பார்தனிலே பாங்குறவே வாழ்ந்த கோதாய்!
சந்ததமும் உனது எழில் வதனம் ஈந்த
சாந்த நிலை எமது மனச் சிறையிலாட
அந்தரத்தில் எமையுலகில் உழல விட்டு
ஆண்டவனின் அருளொழுகு திருத்தாளேற்ற
சென்றனையோ! ரஜனி உன் இழப்பு
சீர்படைத்த நாயகியே! ஆறாதம்மா!!

உன் பிரிவால் ஏங்கித் தவிக்கும் பிரியமுள்ள,
அப்பா, அம்மா, அண்ணா,
தம்பி, தங்கை, உறவினர்கள்.

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

யாழ் ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம்
விசேட பொதுக் கூட்டம்

மேற்படி சங்கத்தின் விசேட பொதுச் சபை கூட்டம் 1992 - 08 - 24 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு 'ட்ரேட் அண்ட் மனேஜ் மன்ற சேவிசஸ்'' இலக்கம் 162, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (ராஜா தியேட்டர் முன்பாக) என்னும் முகவரியில் நடைபெறும். சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

தலைவர்,
செ. சிவபாதம்.
(சர்மிளா பார்மஸி)

செயலாளர்,
மு. பத்மநாதன்.
[வெஸ்லோ மருந்தகம்]

[5241]

யா/கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
பாடசாலை அபிவிருத்திச்சபை
பிரதிநிதிகளைத் தெரிவு செய்தல்

- ★ ஆசிரியர்களுக்கான கூட்டம் முற்பகல் 9 மணி
- ★ பெற்றோர்களுக்கான கூட்டம் முற்பகல் 10 மணி
- ★ பழைய மாணவர்களுக்கான கூட்டம் - முற்பகல் 11 மணி

காலம்: **12 — 08 — 1992** புதன்கிழமை

தயவு செய்து எல்லா ஆசிரியர்களையும், பெற்றோர்களையும், பழைய மாணவர்களையும் சமுகம் தரும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

மு. இராமலிங்கம்,
அதிபர்.

யா/கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.
(22098)

கம்பியூட்டர் கல்வி

- ★ BASIC
- ★ PASCAL
- ★ d BASE III +
- ★ LOTUS 1-2-3
- ★ WORD STAR 5 5

புதிய பிரிவுகள் ஆரம்பம்:

14 — 08 — 1992 WEEK DAY
15 — 08 — 1992 WEEK END

மேலதிக விவரங்களுக்கு:

யுனிக்கோ கம்பியூட்டர் சென்ரர்,
37, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்)

வடமராட்சி:
'சதா பொன்ஸ்',
அல்வாய் கிழக்கு.
அல்வாய்.

தென்மராட்சி:
சயன்ஸ் சென்ரர்,
மடத்தடி,
சாவகச்சேரி.

[சி - 5125]

31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணுலக வாழ்வில்: 05 — 07 — 1909

விண்ணுலக வாழ்வில்: 10 — 07 — 1992

அமரர்

அருணாசலம் சுப்பிரமணியம்

[புங்குடுதீவு - 10 - கொழும்பு ஸ்ரீ கதிரேசன் வீதி, பிரபல வர்த்தகரும், மணியம் ஸ்ரோ் உரிமையாளரும்]

வாழ்வின் வழிகாட்டியே!
வாழ வைத்த ஆருயிர்த் தெய்வமே!
வேதனையில் எம்மைத் தவிக்க விட்டு
விண்ணுலகம் சென்று விட்டீர்களே!
விண்ணுலகம் சென்றாலும் - எங்கள்
எண்ணமதில் என்றும் நிலைத்திருப்பீர்கள்!
மண்ணில் மறைந்திட்டாலும் - எங்கள்
கண்ணில் என்றும் நடமாடுகின்றீர்கள்!
நித்தமும் மாறியம்மன் நினைவிலிருந்தும்
நின்னுயிரை நீத்தீர்களே!

உங்கள் ஆத்மா ஈசனடி சேர என்றென்றும் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

160, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

[22090]

மூளாய்

வதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தான பரிபாலன சபை
ஆரம்ப பொதுச்சபைக் கூட்டம்

இடம்: மேற்படி ஆலய மண்டபம்
காலம்: **30 — 08 — 1992** ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி

- ★ இக் கூட்டத்தில் ஆரம்ப பரிபாலன நிர்வாக சபையாலும், கலை, பண்பாட்டுக் கழகத்தினாலும் அங்கீகரித்த யாப்பு விதிகளை அங்கீகரித்தலும், நடைமுறை சட்டமைப்பு உபவிதிகளை அங்கீகரித்தலும், புதிய நிர்வாக சபைத் தெரிவும், தர்க்காரர் அறிக்கை வாசித்தலும் இடம் பெறும்.
- ★ அங்கத்தவர்களிடமிருந்து ஆலோசனைகள், பிரேரணைகள் ஏற்கும் முடிவு திகதி 23-08-1992 பி. ப. 6-00 மணி.
- ★ இத் தேவஸ்தான அங்கத்தவராகச் சேர விரும்பும் சைவசமயிகள் எவரும் ரூபா 1,000/- ஒரேமுறையில் செலுத்தி ஆயுள் அங்கத்தவராகச் சேரலாம். சாதாரண வருடாந்த அங்கத்தவராக சேர விரும்புவோர் ரூபா 100/- வீதம் வருடம் ஒரு முறை செலுத்தி பதிவு செய்யலாம். இப் பொதுச்சபைக் கூட்ட அங்கத்துவ சேர்வு முடிவு 23 08-1992 பி. ப. 6-00 மணி.
- ★ அங்கத்துவ உரிமை பெற்றவர்கள் மாத்திரம் இக் கூட்டத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர் என்பதையும் அன்புடன் அறியத் தருகின்றோம்.

நன்றி:

'சித்தி விநாயகர் கருணை மாத்திரமானது'

தர்க்காரர்
மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர்-
தேவஸ்தான பரிபாலன சபை சார்பாக.

மூளாய்
05-08-1992

[22074]

மிக முக்கிய கலந்துரையாடல்

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் நடத்தும் மிக முக்கிய கலந்துரையாடல் [10-08-92] நாளை திங்கட்கிழமை மாலை 3 00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

சகலதுறை வர்த்தகர்களும் தவறாது பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

செ. கந்தசாமித்துரை
தலைவர்,
யாழ். வர்த்தக சங்கம்.

(22102)

யாழ். மாவட்ட இறைச்சிக்கடை உரிமையாளர் சமாச அறிவித்தல்

இறைச்சிக்கு வெட்டப்படும் கால்நடைகளைக் கொள்வனவு செய்வதில் ஏற்பட்டிருக்கும் பெரிய தட்டுப்பாடு காரணமாக யாழ். மாவட்ட இறைச்சிக்கடை உரிமையாளர் சமாசம் எடுத்துள்ள தீர்மானத்தை இறைச்சிப் பாவனையாளர்களுக்கு மிக்க வருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

இதன்படி வாரத்தில் புதன் - சனி - ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் யாழ். மாவட்டம் அடங்கிலும் இறைச்சிக்கடைகள் திறந்து வியாபாரம் செய்யப்படும். திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளிக்கிழமைகளில் இறைச்சிக் கடைகள் திறக்கப்படமாட்டாது.

தலைவர்:
மு. சிவானந்தராசா,

பொருளாளர்:
பி. த. சிவலிங்கம்,

செயலாளர்:
க. சிறீகிருஷ்ணன்.

(சி/3031)

அரசினர் ஆயுர்வேத போதனா வைத்தியசாலை
கைதடி

06-08-1992

அரசாங்க அறிவித்தல்

கைதடி அரசினர் ஆயுர்வேத போதனா வைத்தியசாலையில், ஆயுர்வேத விசேட வைத்திய நிபுணர்களுக்கான மூன்று வெற்றிடங்களை நிரப்புவதற்காக, கீழ் கொடுக்கப்பட்டுள்ள தகைமைகளையுடைய ஆயுர்வேத விசேட வைத்திய நிபுணர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) வயதெல்லை 60 வயதுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.
(2) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
(3) பதிவு பெற்ற வைத்தியராக இருத்தல் வேண்டும்.
(4) முறிவு, விஷக்கடி, கண், எரிகாயம் ஆகிய வைத்தியத் துறைகளில் விசேட பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.

இந்த நியமனங்கள் தற்காலிகமானதும், ஒரு வருட காலத்திற்கு மட்டும் வழங்கப்படும். தேவையேற்படின் சேவை நீடிக்கப்படும்.

இவர்கள் பகுதி நேர வைத்தியர்களாகவும், முழு நேர வைத்தியர்களாகவும் நியமிக்கப்படுவர். பகுதி நேர வைத்தியர்களாயின் கிழமையில் 4 நாட்கள் வேலை செய்தல் வேண்டும். இவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 2,200/- வேதனமாக வழங்கப்படும். முழுநேர வைத்தியர்களாயின் கிழமையில் 6 நாட்கள் வேலை செய்தல் வேண்டும். இவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 2,700/- வேதனமாக வழங்கப்படும். வேலை செய்யும் நாட்கள் குறைவாக இருப்பின் அதற்கேற்ப வேதனம் வழங்கப்படும்.

மேலே கொடுக்கப்பட்ட தகைமைகளுடன், தேவையான மற்றும் விபரங்களையும், விண்ணப்பத்தில் சேர்த்து 21 08-1992 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ ''அரசாங்க அதிபர், செயலகம், யாழ்ப்பாணம்'' என்ற விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித மேல் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''ஆயுர்வேத விசேட வைத்தியர் நிபுணர்களுக்கான விண்ணப்பம்'' என்று குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

(சி-3025)

உதயன்

இங்கும் தேவை கையொப்ப இயக்கம்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீது பெரும் இராணுவத் தாக்குதலைத் தொடங்குவதற்கு முன்னோடியாக பலாலி இராணுவ முகாமில் யுத்த கால சிவில் அமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுவதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

யாழ்ப்பாணத்தின் மீது பாரிய தாக்குதல் நடத்தும் திட்டம் சென்ற வருடம் அக்டோபர், நவம்பர் மாதங்களிலேயே காற்றில் மிதந்த கதை. இவ்வருடம் ஜனவரியில் நிச்சயமாக அந்தத் தாக்குதல் நடத்தப்படும் என்று அப்போது இராணுவ உயர் வட்டாரத்தினர் அடித்துச் சொன்னார்கள்

குடாநாட்டின் மீதான பெரிய தாக்குதல்கள் என்று கூறிக்கொண்டு முறையே, மே,ஜூன் மாதங்களில் 'சுழல் காற்று' 'பலவேகய-2' ஆகிய இரண்டு தாக்குதல்களை நடத்தினார்கள் ஆனால் அவர்கள் கூறியது போல குடாநாட்டைக் கைப்பற்ற முடியவில்லை முந்திய நிலைகளில் இருந்து சற்றுத் தள்ளி-சிறு பரப்பளவில்—முன்னேறி தங்கள் எல்லைகளை சிறிது விஸ்தரித்தார்கள்.

இப்போது செப்டம்பரில் தான் மிகப் பெரும் இறுதிச் சமர்-கடைசி அடி— நடக்கப் போவதாகக் காட்டிக் கொள்கிறார்கள். அதற்கான ஆயத்தங்களையும் செய்து வருகிறார்கள்.

இந்த இறுதிச் சமரின் பொருட்டு, கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் இருந்து அப்பகுதி மக்களை இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படாத பகுதி ஒன்றுக்கு இடம்பெயருமாறு கேட்டுக் கொள்வது என்பது அரசின் திட்டமாம். அத்தகைய நடவடிக்கையின் போது ஆகக் குறைந்தது ஒரு லட்சம் மக்களாவது இடம்பெயர நேரிடும் என்று இராணுவ அதிகாரிகளே கணக்கிட்டுள்ளார்கள்.

இராணுவத் தாக்குதல்களை மேற்கொள்வதற்காக மக்களை இடம்பெயருமாறு கேட்பதற்கு இராணுவத்துக்கோ அல்லது அரசாங்கத்துக்கோ உரிமையுண்டா? பொதுமக்களின் பாதுகாப்புக் கருதியே தாம் அவ்வாறு செய்வதாகப் படையினரும், அரசும் காரணம் கூறலாம். தர்க்கம் செய்யலாம்.

ஆனால் தமிழ் மக்களை அரசு தனது பிரஜைகள் என்று கருதினால் குண்டு வீசுமா? எறிகணை எறிந்து தாக்குமா? கடந்த இரண்டு வருடங்களாக படைகள் அதனையே செய்து வருகின்றன. ஸ்ரீலங்காப் படைகள் தங்களைப் பாதுகாப்பதற்கும் பதிலாக அழிப்பதையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு செயற்படுகின்றன என்பதை தமிழர்கள் அனுபவத்தில் உணர்ந்துள்ளார்கள்; கண்டுள்ளார்கள்.

எனவே அரச படைகள் எம்மை இடம்பெயருமாறு கேட்பது, பாதுகாப்பதற்கல்ல என்பதே தமிழர்களின் நிலைப்பாடு. இதில் இரண்டு கருத்துகளுக்கு இடமிருக்க முடியாது. கோவில்கள், பாடசாலைகளில் தங்குமாறு கூறிவிட்டு அந்த இடங்களுக்கே குண்டு போட்டதையும், அகதி முகாம்கள் மீது ஷெல் எறிந்தும், குண்டு போட்டும் கொன்றதையும் தமிழர்கள் மறந்து போனால் மட்டுமே இரண்டு கருத்துகளுக்கு இடமிருக்க முடியும்.

தமிழர்களை பாதுகாப்பதாகக் கூறுவதற்கோ இடம்பெயருமாறு கேட்பதற்கோ அரசுக்கும் அதன் படைகளுக்கும் உரிமையில்லை. அந்த உத்தரவுக்குத் தாம் பணியப் போவதில்லை என்று சர்வதேச அமைப்புகளுக்கு தமிழ் மக்கள் இப்போதே — முன்கூட்டியே, தெரிவித்துக் கொள்வது நல்லது.

ஐ. நா. சபை, செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு. உலகின் சகல நாடுகளினதும் அரசாங்கங்கள் ஆகியவற்றுக்கு அறிவிக்க வேண்டும். இதற்கான கையொப்பம் சேகரிக்கும் இயக்கம் ஒன்று உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும். வடக்கு - கிழக்கில் நடப்பது உள்நாட்டு யுத்தம் அல்ல, ஆக்கிரமிப்புப் போர் என்பது உலகுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும்.

இலட்சிய எழுத்தாளர் கோவை மகேசன்

பி. நடராசன்

“சுதந்திரனில் நான் சம்பளத்துக்காக மட்டும் பணியாற்றிக் கொண்டிருக்கவில்லை. நான் ஏற்றுக்கொண்ட அரசியல் இலட்சியத்துக்காக என்னை நானே அழித்துக் கொண்டிருக்கிறேன் ... நான் ஏற்றுக்கொண்டுள்ள அரசியல் இலட்சியத்துக்காக எனது மனச்சாட்சியை அடகுவைக்காமல் எனது பேனாவைப் பயன்படுத்தும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன்.''

— இவ்வாறு, ''நான் ஏன் கைதியானேன்?'' என்ற சுதந்திரன் (2-2-71) கட்டுரைத் தொடரில் எழுதியவர் கோவை மகேசன். சுதந்திரனின் தொடர்ச்சியறா ஒரு மரபில் நின்று கோவை இதனை எழுதினார்.

தமிழருடைய தன்னாட்சி உரிமையை நிலைநாட்டும் கொள்கை பரப்பு ஏடாக தலைவர் பொன்னம்பலத்தால் 1947 இல் நிறுவப்பட்ட சுதந்திரன், விரைவில் தலைவர் செல்வநாயகத்தால் பொறுப்பேற்கப்பட்டது. கோ. நடேசையர் காலத்தில் புயலாகத் தொடங்கிய சுதந்திரன் இடைக்காலத்தில் நாடாளுமன்ற நீரோடையில் குளிர்ந்து தென்றலாகியது. 1970 களின் பின் கோவை மகேஸ்வரசர்மா (கோவை மகேசன்) காலத்தில் மீண்டும் புயலாகி, 1977 முதல் 1983 வரை தமிழீழ விடுதலைச் சூறாவளியாகிச் சுழன்றடித்தது. 1983 இல் தமிழீழத்தில் சுதந்திரன் நின்றுவிட்டாலும், அது தமிழகத்தில் அவர் பொறுப்பில் ''வீரவேங்கை''யாக மறுபிறப்பெடுத்து, தமிழீழ விடுதலைப் பரப்புரைச் சூறாவளியாகி மீண்டும் வீசியது.

''இலங்கையின் நாலாம் மாடியில் (சிறிலங்கா உளவுப் படைத் தலைமையகம்] நான் உற்ற இன்னல்களை விடத் தமிழக உளவுப் படையினரிடம் நான் பல மடங்கு அதிக இன்னலுற நேர்ந்தது''

— என்ற கோவையின் கருத்து அவருடைய கொள்கை உறுதிக்கும் எழுத்தின் வேகத்துக்கும் அஞ்சாமைக்கும் சான்றாக அமைந்தது. இப்பண்புகளே அவருடைய இறுதி நோய்க்கும் இறப்புக்கும் காலாக அமைந்தன. அவையே அவரது புகழுக்கும் காலாயின.

''தமிழகத்தின் மூத்த எழுத்தாளர் கோவை மகேசன் காலமானார்'' என்று தமிழோசை (பி.பி.சி.) தமிழகச் செய்திகளில் 'இந்தியா டுடே' சஞ்சிகையில் தமிழ் இதழ் ஆசிரியர் மாலன் கூறிய போது, கோவையின் உலகளாவிய புகழ் புரிந்தது. 'தமிழுக்குத் (தமிழீழத்துக்கு] தொண்டு செய்வோன் சாவதில்லை' என்ற பாரதிதாசனின் தொடரும் கூடவே நினைவுக்கு வந்தது.

முதலில் தமிழரசுக் கட்சியினதும் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியினதும் தமிழரசு - தமிழீழக் கோட்பாட்டின் உத்தியோகப் பற்றற்ற பரப்புரை ஏடாக விளங்கி மக்களை ஓரணியில் திரட்டியது சுதந்திரன். 1977 இல் நாடாளுமன்றத் தலைமை எதிர்க்கட்சித் தலைமையை ஏற்றபோது மக்களிடையே வெறுப்புணர்வு ஏற்பட்டது. சுதந்திரன் தமிழ் மக்களின் குரலாக ஒலித்தது. கோவை ''என்னை'' மூலமும் ''அரசியல் மேடை'' மூலமும் ஒத்துழைப்பு மாவட்ட சபை ஆகியவற்றின் தீய விளைவுகளை, எடுத்துரைத்தார். இதனால் கோவை கூட்டணியிலிருந்து விலக்கப்பட்டார்.

இத் காலகட்டத்தில் தமிழீழ விடுதலையை ஆதரித்த மூத்த தொண்டர்கள் சிலர் தமிழீழ விடுதலை அணியை உருவாக்கினர்; புரட்சிகர இயக்கங்கள் உருவாகி வளர்ந்து கொண்டிருந்த நிலையில் தமிழீழ விடுதலை அணி விடிவாம் அரவும் விளக்காகச் செயற்பட்டு வந்தது. கோவை இதில் தம்மை இணைத்துக் கொண்டு சுதந்திரன் மூலம் விடுதலைக்காகக் குரல் கொடுத்து வந்தார்.

புரட்சிகர விடுதலை இயக்கங்கள் நின்று நிலைத்து வளர்ந்து போராடக் கூடிய வலிமை பெற்ற இயக்கம் எது என்பதை இனங்கண்டு கொண்ட கோவை அதனைப் பற்றிய செய்திகளுக்கு முதன்மை கொடுத்து வெளியிட்டார்; கொடிய பத்திரிகைச் சட்டங்களுக்கு ஆளாகாமல் அவர் இவற்றை எழுதினார். 1983 இல் அவர் விடுதலைப் புலிகளின் ஆதரவாளராக இணைந்து கொண்டு தமிழகம் சென்றார்.

தமிழ்த் தலைவர்கள் காலந்தோறும் தேசிய நீரோட்டத்தில் இணைந்து கொண்டு தமிழருடைய விடுதலைப் போராட்டத்தைக் கைவிட்ட பழைய,புதிய வரலாறுகள் அவருடைய உள்ளத்தில் ஆழ்ந்த வடுவாகப் பதிந்திருந்தன. அரசுடன் பேச்சுவார்த்தை என்று வரும் போதெல்லாம் அவர் தவறு நேர்ந்துவிடும் என்று கலங்கினார்; திம்புப் பேச்சுவார்த்தையில் தமிழீழ விடுதலைப் புலிகள் கலந்துகொள்ள முடிவு செய்த போது அவர் கலங்கினார். தமது கலக்கத்தை எழுத்தாக வடித்தார். ஆனால், பின்னர் கலக்கம் தீர்ந்து தெளிவு பெற்றார். 1990 இல் அவர் தமது உறுதியைப் பின்வருமாறு தெரிவித்துள்ளார்;

''புலிகள் இயக்கம் சுதந்திரத் தமிழீழம் என்ற தனது உயிருக்குயிரான இலட்சியத்தை விட்டுக்கொடுப்பதில்லையென்றும், தனது ஆயுதங்களை எவருக்கும் கையளிப்பதில்லையென்றும் உறுதி பூண்டுள்ளது.

''40 ஆண்டு கால[வரலாற்று அனுபவம் மூலம்] குறிக்கோள் விடுதலைப் புலிகளும் அதன் ஈடிணையற்ற ஒப்பற்ற தலைவர் வே. பிரபாகரனும் தமிழீழ மக்களுக்குப் பரிபூரண விடுதலை பெற்றுத் தருவார்களென்பது உலகத் தமிழர்கள் முழு நம்பிக்கையாகும்; அதுமட்டுமல்ல, தமிழ் மக்களின் கடைசி நம்பிக்கை ஆகும்.'

[வீர வேங்கை, பெப்-மார்ச் 1990]

முதலில் கலைச்செல்வியிலும் பின்னர் சுதந்திரனிலும் முடிவில் வீர வேங்கையிலுமாக ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டுகள் கோவை மகேசன் பத்திரிகையாளராக விளங்கினார். முப்பது ஆண்டுகள் இடையீடின்றித் தமிழீழ விடுதலைக்காகக் குரல் கொடுத்த ஒரேயொரு, ஒப்பற்ற பத்திரிகையாளர் அவர்.

முதல்முறை கோவை மகேசன் சிறை சென்றபோது தந்தை செல்வா அவரைச் சிறையிலே சந்தித்தார்.

''நீங்கள் மிகப் பெரிய ஒரு கொள்கையை நிலை நாட்டுவதற்காகவே கஷ்டப்படுகிறீர்கள். எது வந்தாலும் மனம் தளர்ந்துவிடாதீர்கள்.'' என்று தந்தை செல்வா கூறினார் (சுதந்திரன், 2-2-71) இதுவே அவரது எழுத்தின் நியமமானது. இதுவே அவர் சாதனை செய்து புகழ்பெற்ற வழி காட்டியது;

★

மனமுடைந்த நிலையிலேயே அகதிகள் திரும்புகின்றனர்

போக முடியாது என்றவருக்கு பொலிஸில் அடி!

கொழும்பு, ஆக 9

தமிழ் நாட்டிலிருந்து கடந்த திங்கட்கிழமை விமானம் மூலம் திருகோணமலை வந்த முதலாவது தொகுதியைச் சேர்ந்த 132 அகதிகளில் பெரும்பாலானோர் மனமுடைந்த நிலையில் காணப்பட்டனர். தமது சொந்த விருப்பத்துக்கு மாறாகவே தாம் திருப்பி அனுப்பப்பட்டதாக இவர்களில் பலரும் தெரிவித்தனர்.

அகதிகள் பலவந்தத்தின் பேரில் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவதாக தெரிவித்த குற்றச்சாட்டுக்களை விசாரிக்க அகதிகளுக்கான ஐ. நா. தூதரக உள்ளூர் பிரதிநிதிகளை நியமித்துள்ளதாக அறிவித்திருந்த போதிலும் எந்த ஒரு பிரதிநிதியாவது தம்மை விசாரிக்கவில்லை என்று இவர்களில் பலரும் தெரிவித்தனர்,

37 குடும்பங்களைச் சேர்ந்த 132 பேரும் கடந்த திங்கட்கிழமை இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் மூலம் சீனன்குடா விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

தங்குவதற்காக விமான நிலையத்தில் இருந்து உப்புவெளியில் உள்ள சிநேரா விடுதிக்கு இவர்கள் கூட்டிச் செல்லப்பட்டனர்.

இவர்கள் அங்கு கூட்டிச் செல்லப்பட்ட போது பெரும்பாலான அகதிகள் மனம் சோர்வடைந்த நிலையிலேயே காணப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

''மனம் உடைந்த நிலையில் தான் நாங்கள் தாயகம் நோக்கிப் புறப்பட்டோம்'' என்று இந்த அகதிகளில் ஒருவரான வடபகுதியைச் சேர்ந்த முதியவர் ஒருவர் தெரிவித்தார். தாம் கையில் எதுவுமே இல்லாத நிலையில் புறப்பட்டதாகவும் அவர் கூறினார்.

''இன்றைய யுத்த நிலையில் நாம் தாயகம் திரும்ப விரும்பவில்லை. எங்களால் இலங்கை திரும்ப முடியாது என்று தமிழ் நாட்டில் உள்ள பொலீஸ் நிலையம் ஒன்றில் நாம் கூறினோம். ஆனால் எமது கோரிக்கைக்கு தாக்குதலே பதிலாகக் கிடைத்தது''

இப்படி வவுனியாப் பகுதியைச் சேர்ந்த அகதி ஒருவர் கூறினார்.

இறுதிக்கால கட்டத்தில் தாம் வேண்டத் தகாதவர்களாக நடத்தப்பட்டதாகவும் ஏன் தமிழ் நாடு வந்தோம் என்று அடிக்கடி நினைப்பதுண்டு என்றும் முல்லைத்தீவைச் சேர்ந்த பெண் ஒருவர் கூறினார்.

திங்களன்று விமானம் மூலம் வந்த 37 அகதிக் குடும்பங்களில் 19 குடும்பங்கள் திருகோணமலையைச் சேர்ந்தவை என்றும் —

ஏனைய குடும்பங்களில் இரு குடும்பங்கள் மட்டுமே யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அகதிகளை திருப்பி அனுப்பும் நடவடிக்கை தாமதமாகலாம்

கொழும்பு, ஆக. 9

தமிழ் நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை தாயகம் திருப்பி அனுப்பும் வேலைகள் தாமதமாகலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

தாயகம் திரும்புமாறு தாங்கள் நிர்ப்பந்திக்கப்படுவதாக தமிழ் நாட்டிலுள்ள அகதிகள் புகார் கூறியிருப்பதையும்—

அகதிகள் திருப்பி அனுப்பப்படும் போது அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரிகள் பிரசன்னமாக இருக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளதையும் தொடர்ந்தே இந்நிலை எழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தமிழக அகதி முகாம்களில் உள்ள ஒரு இலட்சத்து 10 ஆயிரம் பேரில் 23 ஆயிரம் பேர் ஏற்கனவே தாயகம் திரும்பியுள்ளனர். (இ-த)

நல்லூரில் இன்று

கொழும்புத்துறை, ஆக 9

நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவ காலத்தை முன்னிட்டு ஆலய சுற்றாடலில் — 7 ஆம் திருவிழாவான இன்று — ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் விபரம் வருமாறு:-

★ கிழக்கு வாசல் முருகன் தண்ணீர்ப் பந்தலில் (மாலையில்) — எஸ் குமாரசாமியின் இன்னிசைக்கச்சேரி.

★ மேற்கு வீதியில் பிள்ளையார் ஆலய முன்றலில் (மாலையில்) கானசாகரோ பிரம்மஸ்ரீ நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் ''பிரணவ உபதேசம்'' என்ற பொருளில் கந்தபுராண கதாப்பிரசங்கம்.

★ நல்லை ஆதீனத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு — கந்தபுராணப் படிப்பு, பிற்பகல் 3-00 மணிக்கு — பௌராணிகர் மு. இயாகராசாவின் ''முருக இலக்கியங்கள்'' தொடர்விரிவுரை; (உ-30)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்

பாதிக்கப்பட்டவர்களுக்கு வைத்திய உதவிகள் வழங்கும்

வடமாகாணத்தில் இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான வைத்திய உதவிகளை வழங்க அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் பல திட்டங்களை தீட்டி நடைமுறைப்படுத்தி வருகிறது.

இடம்பெயர்ந்த மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்க பல துறைகளிலும் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் புதிய திட்டங்களை வகுத்துள்ளது.

மேற்படி நிறுவனம் வழங்கி வரும் வைத்திய உதவிகளில் சில வருமாறு:

★ அங்கவீனர்களுக்கு, அக்குறைகளை நீக்குவதற்கு செயற்கை அங்கங்களைப் பொருத்துவதற்கான நிதி உதவிகளை ஜெய்ப்பூர் தொழிலகம் ஊடாக வழங்கல்.

★ இராணுவ நடவடிக்கையால் காயமுற்றோரை சிகிச்சைக்கான வைத்தியசாலைக்கு அழைத்து வரும் பிரயாணச் செலவு.

★ முல்லைத்தீவு வைத்தியசாலைக்கான கட்டில் மற்றும் உபகரண வசதிகள்.

★ கிளி[illegible] இல் ஊற்றுப்புலத்தில் வைத்திய சிகிச்சை[illegible]கான நிதி உதவி.

★ யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை ஆகிய இடங்களில் உள்ள அரசினர் வைத்தியசாலையில் கடமை புரியும் தொண்டர் வைத்தியர்களுக்கான வேதனமும், இருப்பிட வசதிகளும். (உ-3)

கால்நடை வைத்திய சேவை

யாழ்ப்பாணம், ஆக. 9

கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன், நடத்தப்பட்ட கால்நடை வைத்தியப் பயிற்சி வகுப்பில் பயிற்சியினை முடித்துக் கொண்ட பயிற்சியாளர்கள் தற்போது கால்நடை வைத்திய சேவையினை மேற்கொண்டு வருகின்றனர் என்று அறிவிக்கப்படுகிறது. (த)

சிங்கப்பூரில் குண்டு வெடிப்பு

கோலாலம்பூர் ஆக. 9

சிங்கப்பூரில் நிர்மாணிக்கப்பட்டு வந்த வர்த்தக நிலையம் ஒன்றில் இடம்பெற்ற [illegible] 3 பேர் பலியாகினர். 3[illegible] அறிவிக்கப்படுகிறது. (த)

வட - கிழக்கு பிரச்சினையை வைத்து அரசு நடத்துகிறார் ஜனாதிபதி

பேர்னாட் சொய்ஸா குற்றச்சாட்டு

கொழும்பு, ஆக. 9

இன்றைய அரசாங்கம் வடக்கு கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்பவில்லை. கடந்த 10 வருடமாக இந்த யுத்தமும் பிரச்சினையும் நீண்டுகொண்டே செல்கின்றன. இதனை சாட்டாக வைத்து அரசாங்கத்தை நடத்திச் செல்லவே ஜனாதிபதி விரும்புகிறார்.

மாத்தறையில் அண்மையில் நடைபெற்ற அனைத்து எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசும்போது லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் திரு. பேர்னாட் சொய்ஸா இவ்வாறு சொன்னார்.

கூட்டத்திற்கு சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமை வகித்தார்.

திரு. பேர்னாட் சொய்ஸா தொடர்ந்து பேசுகையில்,

இந்த யுத்தத்தை நடத்துவதற்காக கோடிக் கணக்கான ரூபாய்கள் செலவிடப்பட்டு, ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியிடப்படுகின்றன; எனவே அனைத்து எதிர்க் கட்சியினரும் ஒன்றிணைந்து இன்றைய அரசாங்கத்தைப் பதவியில் இருந்து அகற்றப் போராட வேண்டும் என்றார்; (இ-த)

படையினரைத் தாக்கி

ஆயுதங்களை கைப்பற்றுவதில் புலிகள் வெற்றி கண்டுள்ளனர்

ரணில் ஒப்புக் கொள்கிறார்

கொழும்பு, ஆக. 9

படையினர் மீதான தாக்குதல்களின் போது அவர்களிடமிருந்து ஆயுதங்களையும், வெடிமருந்து வகைகளையும் கைப்பற்றும் நோக்கத்தில் விடுதலைப் புலிகள் வெற்றி கண்டுள்ளனர்.

அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்கா கடந்த வியாழன் நடந்த செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது:-

விடுதலைப் புலிகளின் தாக்குதல் இரண்டு நோக்கங்களைக் கொண்டது.

ஒன்று கிழக்கிலும் அதன் எல்லைப் புறங்களிலும் இராணுவத்தினரை நிலை கொள்ளச் செய்வது.

மற்றது படையினரிடமிருந்து ஆயுதங்களையும் வெடிப் பொருள்களையும் கைப்பற்றுவது.

விடுதலைப் புலிகள் தமது முதலாவது நோக்கத்தில் தோல்வி கண்டுள்ளனர்.

காரணம் இராணுவம் தனது சண்டையிடும் பிரிவுகளை கிழக்குக்கு நகர்த்துவதை நிறுத்தி விட்டதே ஆகும்.

இரண்டாவது நோக்கத்தில் விடுதலைப் புலிகள் வெற்றி கண்டுள்ளனர்:

படையினரிடம் இருந்து ரைபிள்கள் மற்றும் வெடிமருந்துகளையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு திரு. விக்கிரமசிங்கா சொன்னார்,

7 தினங்களில் கிழக்கிலும் வடக்கு எல்லைப் புறத்திலும் 65 படையினரை இராணுவம் இழந்துள்ளது என்றும், இது அதிகம் என்றும் கூட்டுப் படைகள் பேச்சாளர் பிரிகேடியர் தயா விஜேசேகரா செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். (இ-எ)

சர்வதேசப் போட்டிகளில் இந்திய வீரர்களுக்குத் தடை?

இதுவரை ஒரு பதக்கமாவது இல்லை

சர்வதேசப் போட்டிகளில் இந்திய விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்வதற்கு சில ஆண்டுகளுக்கு தடை விதிப்பது பற்றி மத்திய அரசு பரிசீலனை செய்து வருகின்றது.

இந்திய மத்திய விளையாட்டுத்துறை இணை அமைச்சர் மம்தா பானர்ஜி லோகசபையில் நேற்று முன் தினம் இத்தகவலை வெளியிட்டார்.

தற்போது ஸ்பெயினின் பார்சிலோனா நகரில் நடைபெற்று வரும் ஒலிம்பிக்ஸ் போட்டிகளில் இந்தியா இதுவரை ஒரு பதக்கத்தைக் கூடப் பெறவில்லை.

இது குறித்து லோகசபை மற்றும் ராஜ்யசபையில் உறுப்பினர்கள் கவலை தெரிவித்தனர்;

உ.

[illegible]

கொடுமையைக் கண்பார்!

என்புமாவன் உன்பகைவன் என்றே இறுமாந்து
வன்பகையைக் கண்டும் வருந்திலமே - மின்பிரபை
கூர்வேல் நல்லூரா குண்டடித்து எமைக் கொல்லும்
பாரோன் கொடுமையைக் கண்பார்.

★ ★ ★

கூர் ஒடிந்து போச்சோ குன்றுருவி நின்றவேல்,
சூர் எழுந்து ''ஹெலி''யாய் சுற்றுகிறான், - ''கிரௌஞ்சகிரி
பன்னிருகைப் பாலன்'' எனப் பகடியோ ''சாம்'' கணையால்
மின்விடேன் அவன் நிலத்தில் வீழ.

- தில்லைச்சிவன்.

நாளை

கொக்குவில் மேற்கு கலைமகள் சனசமூக நிலையம் நடத்தும் ராஜன் கிருவர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி நாளை பிற்பகல் 1-30 மணிக்கு நிலைய முன்றலில் நடைபெறும். (உ)

தாக்குதல்

தெஹிவளை சந்தியில் வைத்து அரச எதிர்ப்புப் பிரசுரங்களை விநியோகித்த தெஹிவளை - கல்கிஸை மாநகரசபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மீது பொலிஸார் குண்டாந்தடிப் பிரயோகம் செய்தனர் எனக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக கொழும்பு மாவட்ட சுதந்திரக்கட்சி எம். பி. வி. கி. குணரத்தின தெரிவித்தார்.

கூட்டத்தைக் கலைத்தோமே தவிர குண்டாந்தடிப் பிரயோகம் செய்யவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (இ-எ)

3 பொலிஸார் வேலை நீக்கம்

பெலவத்த தடுப்பு முகாமில் இருந்து 10 தடுப்புக் காவல் கைதிகள் தப்பி ஓடியது தொடர்பாக இம் முகாமைச் சேர்ந்த 2 பொலிஸாரும், ஒரு ரிசேர்வ் பொலிஸாரும் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்; (த)

ஈழத் தமிழர்களுடன் ரஜனிகாந்த் தொடர்பாம்!

நடிகர் ரஜனிகாந்தின் வீட்டுக்கு ஈழத்தமிழர்கள் அடிக்கடி வந்து போகிறார்களாம். அதனால் அவரது வாகனமும் அடிக்கடி கடுமையாகச் சோதிக்கப்படுகிறது.

சென்னைச் செய்திகள் இத்தகவலை வெளியிட்டன.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் வீடு அமைந்துள்ள போயஸ்கார்டன் பகுதியிலேயே நடிகர் ரஜனிகாந்தின் வீடும் அமைந்துள்ளது.

அதனால் அப்பகுதியில் காரில் போய்வரும் ரஜனிகாந்தை பொலீஸார் அடிக்கடி வழிமறித்து தொல்லை கொடுத்து வருகிறார்களாம். சில சமயங்களில் அவரது காரை வழிமறித்து சுமார் அரைமணி நேரம் வரை படையினர் குடைந்து குடைந்து சோதிக்கிறார்களாம். இப்படியான சமயங்களில் வீதியில் ஒதுக்கி விடப்படும் ரஜனிகாந்த் வீதியில் நின்றபடி இரண்டு சிகரெட்டுகளைக் குடித்து முடிக்கும் வரை சோதனை நீடிப்பதுண்டாம்.

இதனால் கோபமுற்ற ரஜனிகாந்த் தமது காரை வழிமறித்த பொலீஸாரிடம் "எனது காரையே ஏன் இப்படி மடக்கி, மடக்கி சோதனை போடுகிறீர்கள்?"—என்று கேட்டாராம்.

அதற்கு "உங்கள் வீட்டுக்கு அடிக்கடி ஈழத்தமிழர் வந்து போவதாக தகவல் கிடைத்துள்ளது. அதனால் சோதனையைத் தீவிரமாக்கும்படி எங்களுக்கு உத்தரவு வந்துள்ளது. உங்கள் காரில் வரும் மற்றைய நபர்களையும் சோதனை போடும்படி நாம் பணிக்கப்பட்டுள்ளோம்."— என்று பொலீஸார் பதிலளித்தனர்.

இதுபற்றி பொலீஸ் உயரதிகாரி ஒருவர் தகவல் வெளியிடுகையில்—

"கார் மீது காரைக் கொண்டு மோதி தாக்குதல் நடத்தும் சம்பவம் நடக்கும் என்பதால் தற்போது வாகனங்களில் சோதனை தீவிரமாக்கப்பட்டுள்ளது."— என்றார். [உ]

விசேட சேவை படையினர்

விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலில் கரடியனாறில் கொல்லப்பட்ட படையினரில் சிலர் விசேட சேவை படையணியைச் சேர்ந்தவர்கள் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

கரடியனாறு தாக்குதலில் 14 படையினர் உயிரிழந்தது தெரிந்ததே.

ஆறாம் மாத நினைவஞ்சலி

விஸ்வகர்மத்திலகர்
அமரர்

முத்துத்தம்பி இரத்தினவேலு

[சந்தனம்]

அன்னையின் மடியில்: 25 - 02 - 1943
ஆண்டவன் அணைப்பில்: 09 - 02 - 1992

அன்பின் இருப்பிடமே
பண்பின் உறைவிடமே
பாசத்தின் இருப்பிடமே
எங்கள் இனிய ஐயாவே
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
மாதங்கள் ஆறு மறைந்தாலும்
உங்கள் நினைவு எம் நெஞ்சங்களில்
என்றும் நீங்காது நிலைத்திருக்கும்.

நீங்கள் தெய்வமாக இருந்து எங்களை வழி நடத்த வேண்டும். ஐயா உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

நாகேஸ்வரி இல்லம்,
தேவாலய ஒழுங்கை,
சுழிபுரம்,
ஆனைக்கோட்டை.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், மருமக்கள்,
உறவினர், நண்பர்கள்.

[22103]

மரண அறிவித்தல்

திருமதி கந்தசாமி வள்ளியாச்சி

பண்ணாகத்தைச் சேர்ந்த கந்தசாமி வள்ளியாச்சி காலமானார். அன்னார் காலஞ்சென்ற பண்ணாகம் கந்தசாமி [முன்னாள் நிடீர் வீதி பரிசோதகர், இ. போ. ச.] அவர்களின் அன்பு மனைவியும், சிவவாசகம் [அதிபர் - தமிழ் மகாவித்தியாலயம், வவுனியா], திருமதி பொன்னம்பலம் பொன்னம்மா, கிருஷ்ணமூர்த்தி [இ. போ. ச, காரைநகர்], திருமதி துரைசிங்கம் சறோசா, காலஞ்சென்ற ஆறுமுகசாமி மற்றும் திருமதி சுப்பிரமணியம் தேவமலர், பேரின்பநாதன் [ஜெர்மனி], தேவராசா [நோர்வே] ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி சாரதாதேவி [அதிபர், மூன்று முறிப்பு மகாவித்தியாலயம், வவுனியா], பொன்னம்பலம், புஸ்பலட்சுமி, துரைசிங்கம், சுப்பிரமணியம் [இ. போ. ச, காரைநகர்], பராசக்தி, சந்திராதேவி [நோர்வே] ஆகியோரின் அன்பு மாமியாரும், சசிகரன் [சுவிஸ்], மேகலை [கொழும்பு], சிவமூர்த்தி [சுவிஸ்], சிவநேசன் [சுவிஸ்], சிவரஞ்சினி, சிவரஜனி, மயூரன், துரைராஜ், குகராஜ், ஜெயராஜ், சாந்தரூபன், சுபரூபன், அனுசியா, தர்சிகா, மஜேந்திரன், அரவிந்தன் [நோர்வே], சுகந்தன் [நோர்வே] ஆகியோரின் அன்புப் பேத்தியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
க. கிருஷ்ணமூர்த்தி [மகன்]
[அப்புத்துரை]

பண்ணாகம்,
சுழிபுரம்.

[22104]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 09-08-92 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

பொலிஸ்காரர், உயிரிழப்பு

கொழும்பு, ஆக. 9

மட்டக்களப்பு மாவட்டம். பெரியஉப்போடை என்னுமிடத்தில் நடந்த வியாழன்று ரோந்து சென்ற பொலீஸார் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் பொலீஸ்காரர் ஒருவர் உயிரிழந்தார். மற்றும் ஒருவர் காயமடைந்தார்.

உயிரிழந்த பொலிஸ் கான்ஸ்டபிளின் துப்பாக்கியையும், மகஸின்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர். [ஓ-த-5]

உதைபந்தாட்டப் போட்டிகள்

குருநகர், ஆக. 9

அமரர் சி. பஞ்சலிங்கம் நினைவாக திருவள்ளுவர் சனசமூக நிலையத்தால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளின் இன்றைய ஆட்டங்கள் மாலை 4 மணிக்கு புனித சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும்.

முதல் ஆட்டம் குருநகர் தொடர்மாடி விளையாட்டுக் கழகத்திற்கும், கலைச்சுடர் வி. கழகத்திற்கும் இடையே நடைபெறும். இரண்டாவது ஆட்டம் அரியாலை வி. கழகத்திற்கும், ஜோன் கென்னடி வி. கழகத்திற்கும் இடையே நடைபெறும். [ஆ-51]

விண்வெளியிலும் மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம்

லண்டன், ஆக. 9

விண்வெளியை ஊடறுத்துச் செல்லும் செப்புக் கம்பியில் இருந்து மின்சாரம் உற்பத்தியாகிறது.

அமெரிக்க விஞ்ஞானிகள் இதனைக் கண்டுபிடித்துள்ளனர். இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள் வெற்றி அளித்திருப்பது பற்றிய செய்தி ஒன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க விண்வெளி ஓடமான அட்லாண்டிஸில் இருந்து விண்வெளியில் 240 மீற்றர் நீளமான செப்புக்கம்பி போடப்பட்டு அதிலிருந்து 36 வோல்ட் மின்சாரம் பாய்ந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. [த-5]

கிரிக்கெட் ஆட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 9

அமரர் தி. ஆலாலசுந்தரம் ஞாபகார்த்தமாக அரியாலை மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று ஷப்றா அணியை எதிர்த்து அரியாலை "பி" அணி மோதும்.

முப்பது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட இந்த ஆட்டம் இன்று நண்பகல் ஒரு மணிக்கு அரியாலை மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகும். [உ]

பெற்றோல் விலை அதிகரிப்பு!

மட்டக்களப்பு மாவட்டம் கல்முனையில் ஒரு போத்தல் பெற்றோல் 60 ரூபாவிற்கு விற்கப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகள் அங்கு அதிகரித்துள்ளதாகவும் —

கடந்த இரண்டு வாரங்களாகத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. [த]

வெளிவந்துவிட்டது
உலகம்
அரசியற் பிரிவுகள்
தமிழ் இலக்கிய வரலாறு
விற்பனையாளர்
ஸ்ரீலங்கா புத்தகசாலை
234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

மிக முக்கிய தளபதி டென்ஸில் கொப்பேகடுவ

யாழ்ப்பாணம், ஆக. 9

கண்ணிவெடிக்குப் பலியான வட பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ (வயது 52) விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் ஸ்ரீலங்காப் படைகளை வழிநடத்திய முக்கிய முன்னணித் தளபதி என்பது குறிப்பிடத்தக்கது.

1960 இல் இராணுவத்தில் சேர்ந்த அவர் 1990 இல் மேஜர் ஜெனரல் பதவிக்கு தரமுயர்த்தப்பட்டார்.

பிரிட்டனின் றோயல் இராணுவ அக்கடமியின் பட்டதாரியான மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ ஸ்ரீலங்கா இராணுவத்தில் முக்கிய நிலையில் வைத்து கருதப்பட்டவர் ஆவார்.

1987 ஆம் ஆண்டு வடமராட்சியில் மேற்கொள்ளப்பட்ட "ஒப்பரேஷன் லிபரேஷன்" இராணுவ நடவடிக்கை தொடக்கம் அண்மையில் வடக்கில் மேற்கொள்ளப்பட்ட "பலவேகய I" பலவேகய II" நடவடிக்கைகள் வரை பல்வேறு இராணுவத் தாக்குதல் நடவடிக்கைகளை முன்னின்று நடத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் இராணு அதிகாரிகளுக்கான உயர் விருதான ரணவிக்கிரம விருது பெற்றவர்.

"ரணவிக்கிரம", "ரணசூர" பட்டம் பெற்ற விமலரத்ன

யாழ்ப்பாணம், ஆக. 9

நேற்று கண்ணிவெடிக்குப் பலியான மேஜர் ஜெனரல் விஜய விமலரத்ன [51 வயது] 1961ஆம் ஆண்டு இராணுவத்தில் சேர்ந்தார்.

தனது பணியில் அவர் காட்டிய திறமைக்காக அவருக்கு "ரணசூர", "ரண விக்கிரம" ஆகிய இராணுவச் சிறப்புப் பட்டங்களை ஸ்ரீலங்கா அரசு வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. [உ-10]

உயிரிழந்த ஜயமஹா உயர் கடற்படை அதிகாரி

யாழ்ப்பாணம், ஆக. 9

உயிரிழந்த கடற்படை அதிகாரி மொஹான் ஜயமஹா [வயது 43] வடக்கு. கிழக்கு மாகாணத்தின் இராணுவ நடவடிக்கைகளைத் திட்டமிடும் உயர் கடற்படை அதிகாரியாவார்.

1969 ஆம் ஆண்டு கடற்படையில் சேர்ந்த அவர் 1990 ஆம் ஆண்டு பொறுப்பதிகாரி தரத்துக்கு உயர்த்தப்பட்டார்.

கடற்படை அதிகாரிகளில் மிக உயர்நிலை அதிகாரி அவர் என்பதும் —

இந்தியா, பிரிட்டன், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் சிறப்பு பயிற்சி பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. [உ-ஒ-எ-10)

நேரில் சென்று--

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களைச் செயற்படுத்துவது தொடர்பான திட்டங்களை நேரில் ஆராய்ந்தனர்.

அதன் பின்னர் படை உயரதிகாரிகள் அனைவரும் ஒட்டுமொத்தமாக இராணுவ வாகனம் ஒன்றில் ஏறி, காரைநகர் நோக்கி வந்த வழியே திரும்பினர் என்றும் —

வழியில் இருந்த அழுக்கக் கண்ணிவெடியில் (Pressure mine) அவர்கள் வந்த வாகனம் சிக்கிச் சிதறியது என்றும் அறிவிக்கப்பட்டது.

தாக்குதல் நடந்த இடத்துக்கு ஐநூறு யார் தொலைவில் ஹெலிக்கொப்டர் ஒன்றும், இரு இராணுவ வாகனங்களும் தரித்திருந்தன என்றும் —

அவற்றில் இருந்த அதிகாரிகள் கண்ணிவெடிச் சம்பவத்தை நேரில் கண்டனர் என்றும் ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்துக்கு மிக அருகே வேலணை அமைந்திருப்பதால் அங்கிருந்து விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்துவது சுலபம் என்றும் —

அதனாலேயே இராணுவத்தின் மூத்த அதிகாரிகள் அங்கு நேரில் சென்று நிலைமையை ஆராய்ந்தனர் என்றும் பி. பி. ஸி. அறிவித்தது. [உ-ஒ-எ-5-10]

கொப்பேகடுவவுக்கு---

[[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அவர் உயிரிழந்தார்.

கொழும்பு மருத்துவமனையில் கொப்பேகடுவவின் சடலத்தைக் காண பொதுமக்களும், பத்திரிகையாளர்களும் திரளாகக் கூடியிருந்தனர். ஆனால் அவர்கள் மருத்துவமனைக்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

இராணுவ வாகனங்கள் கொழும்பு ஆஸ்பத்திரியைச் சுற்றி நிறுத்தப்பட்டிருந்தன.

அதன் பின்னர் அவரது பூதவுடல் அவரது வீட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டது. அங்கு மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

எச்சரிக்கப்பட்டிருந்தும்...

[1 ஆம் பக்கத்தொடர்ச்சி]

இந்த கேள்வி இராணுவ வட்டாரங்களில் கிளம்பப்பட்டிருக்கிறது.

அவர்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து ஒரு வாகனத்தில் சென்றது துரதிர்ஷ்டவசமானது என்று கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்

காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுள்ளது)
வழக்கம்பரை — சுழிபுரம்

விசேட பொதுக்கூட்டம் - 16-08-92

மேற்படி சங்கத்தில் விசேட பொதுக்கூட்டம் 16-08-92 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு பண்ணாகம் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் மேற்படி சங்கத் தலைவர் திரு. ச. சிவஞானம் B. Sc; [Dip-in-Ed] அவர்களின் தலைமையில் நடைபெறும். பொதுச்சபை பிரதிநிதிகள் தவறாது குறிப்பிட்ட நேரத்துக்கு சமுகம் கொடுத்து ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

க. நடராசா
செயலாளர்

7-8-92

குறிப்பு: பொதுச்சபை பிரதிநிதிகள் இடம்பெயர்ந்து இருப்பதால் அவர்களின் முகவரி அவர்களால் இதுவரை அறிவிக்கத் தவறியுள்ளவர்கள் கூட்ட நிகழ்ச்சி நிரலை வழக்கம்பரையில் உள்ள சங்க தலைமைக் காரியாலயத்தில் செயலாளரிடம் பெற்றுக் கொள்ளவும். ஏனையவர்களுக்கு நிகழ்ச்சி நிரல் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது.

[சி/3030]

ஒலிம்பிக்ஸ் போட்டி; இன்று இறுதி நாள்

லண்டன், ஆக. 9

ஸ்பெயினின் பார்ஸிலோனா நகரில் கடந்த 25 ஆம் திகதி ஆரம்பமான ஒலிம்பிக்ஸ் போட்டிகள் இன்றுடன் முடிவடைகின்றன.

இந் நிலையில் நேற்று முன்தினம் வரை நடந்த போட்டிகளில் சுதந்திர குடியரசுகளின் பொது நல அமைப்பு (முன்னாள் சோவியத்) முன்னணியில் உள்ளது. முதல் நான்கு இடங்களை பெற்று முன்னணியில் உள்ள நாடுகளின் பதக்க விவரம் வருமாறு:-

	தங்கம்	வெள்ளி	வெண்]
★ சுதந்திர குடியரசுகளின் பொது நல அமைப்பு	42	34	25
★ அமெரிக்கா	33	33	32
★ ஜெர்மனி	27	21	27
★ சீனா	16	22	15

(உ-5)

எல்லைப்புற காவல் நிலையங்களில் படையினர் உஷார் நிலையில்

வவுனியாவுக்கு வடக்கே எல்லைப் புறங்களில் படையினர் உஷார் படுத்தப்பட்டுள்ளனர் என கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்பதாலேயே படையினருக்கு இவ்வாறு பணிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. [த]

தெற்கில் எம். பியை கொல்ல வைக்கப்பட்ட கண்ணி மீட்பு

அக்குறேகொட பொத்துஹர என்ற இடத்தில் வைத்து ஆளும் கட்சி எம். பி. ஒருவரை கொல்வதற்கு வீதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடி ஒன்றை பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

அண்மையில் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட ஜே. வி. பியின் ஆயுதப் பிரிவு உப தலைவர் எனச் சந்தேகிக்கப்படும் நபர் ஒருவர் கொடுத்த தகவலின்படி அந்தக் கண்ணிவெடி கைப்பற்றப்பட்டதாம்.

எம். பி. வரும் பாதையில் கண்ணி வெடியை வைத்திருந்ததாகவும்—

கண்ணி வெடிக்கு மேலால் அவரது வாகனம் சென்ற போதும், கண்ணிவெடியின் 'பற்றரி' செயற்படாததால் அது வெடிக்கவில்லை என்றும் —

தமது தலைவர் பொலீஸாரிடம் சிக்கியதை அடுத்து தான் இப்பகுதியில் இருந்து வேறு இடத்துக்குப் போய் விட்டதால் பின்னர் அந்தக் கண்ணி வெடியைத் தன்னால் அகற்ற முடியாது போனது என்றும் — அந்த நபர் பொலீஸாரிடம் தெரிவித்தாராம். [உ-5]

ஈழத்தமிழர் படுகொலை தொடர்ந்தால்

இராமேஸ்வரம் நோக்கி இருபது கட்சிப் பேரணி!

ராமதாஸ் எச்சரிக்கை

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதை இந்திய மத்திய அரசும், தமிழக மாநில அரசும் தடுத்து நிறுத்தாவிட்டால் இராமேஸ்வரம் நோக்கி 20 கட்சிப் பேரணி நடத்தப்படும்.

—இவ்வாறு பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

இலங்கையில் விடுதலைப் புலிகள் மீதான முப்படைத் தாக்குதலைக் கண்டித்து அண்மையில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் ஒன்றின் முடிவில், உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

நாங்கள் மத்திய, மாநில அரசுக்கும் சிங்கள அரசுக்கும் எச்சரிக்கை விடுக்கிறோம். ஈழத்தமிழர் கொல்லப்படுவதும், ஈழ அகதிகளை பலவந்தமாக தமிழகத்திலிருந்து வெளியேற்றுவதும் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். இல்லாவிட்டால் இருபது கட்சிப் பேரணி இராமேஸ்வரம் நோக்கிப் போகும்— என்றார் அவர். [உ]

சு. கவுடன் கூட்டுச் சேர்வோர் கைச் சின்னத்தை ஏற்க வேண்டும்

அனுரா கூறுகிறார்

கொழும்பு, ஆக. 9

எதிர்க்கட்சிகள் சேர்ந்து அமைக்கும் எந்த கூட்டுப் பொது முன்னணியும் "கை" சின்னத்தையும் "நீல" வர்ணத்தையும் ஏற்றுக் கொண்டதாகவே இருக்க வேண்டும்.

சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் எம். பியுமான திரு. அனுரா பண்டாரநாயக்கா கடந்த திங்கள் நடந்த சுதந்திரக் கட்சி நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

எந்தப் பொது முன்னணியிலும் முன்னணி வகிக்கும் பங்கு சுதந்திரக் கட்சிக்கு இருக்க வேண்டும்; தொகுதி உடன்பாட்டு விஷயத்தில் தெளிவான கொள்கை இருக்க வேண்டும். முந்திய தேர்தல்களில் கிடைத்த வாக்குகளின் அடிப்படையிலேயே தொகுதிகள் பகிர்வு இடம்பெற வேண்டும்.

புதிதாக உருவான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தனித்துப்போட்டியிடும் பட்சத்தில் அதனால் சுதந்திரக் கட்சிதான் லாபமடையும்.

இப்படி திரு பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

திரு. மைத்திரிபால சேனநாயக்கா கூட்டத்திற்கு தலைமை வகித்தார். [இ.எ]

இனப்பிரச்சினையை தீர்க்க எதிர்கட்சிகள் உதவவேண்டும்

அமைச்சர் விஜேபால மெண்டிஸ்

இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும்.

அமைச்சர் விஜேபாலமெண்டிஸ் முன்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இனப்பிரச்சினை காரணமாக நாடு பெருமளவு இரத்தத்தைச் சிந்திக் கொண்டிருக்கிறது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ள அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டு வருகின்றார்கள்.

என்ன விலை கொடுத்தேனும் இந்த நிலைமை நாம் தடுத்து நிறுத்த வேண்டும்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் முன் வைக்கும் யோசனைகளில் உள்ள ஓட்டைகளைக் கண்டுபிடிப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்காமல் நாட்டின் இந்தப் பாரிய பிரச்சினைக்கு இறுதியான தீர்வு ஒன்றைக் கொண்டுவர எதிர்க்கட்சிகள் உண்மையாக ஒத்துழைக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் விஜேபால மெண்டிஸ் கேட்டுக் கொண்டார். [த-எ]